கடுவெல, இஹல போமிரிய, 112/2சீ எனும் இலக்கத்தைச் சேர்ந்த அப்ரம்பாவத்தகே இந்திராவதி ரொட்ரிகோ முணசிங்க ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ரஷ்மரா ஆப்தீன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட 1347 ஆம் இலக்க, 2013, ஒற்றோபர் 1 ஆந் திகதிய கொழும்பு 8, ரொட்னி வீதி, 78/3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தர்ஷன ஜயந்த பத்திரண என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டதுடன், இன்று முதற்கொண்டு வெற்றும் வெறிதுமாக்கப்பட்டுள்ளதென கருதப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

அப்ரம்பாவத்தகே இந்திராவதி ரொட்ரிகோ முணசிங்க.

8-372

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 42/4, தேக்கவத்தை, ஆடியம்பலம் எனும் இடத்தைச் சேர்ந்த முனிதாச பத்திரனகே சுரேந்திர ஆரியசே ஆகிய நான், இலங்கைப் பிரசையான கலகெதர ஆரச்சிலாகே திலிகா சஞ்ஜீவனி வீரசிங்க அவர்களுக்கு 2013.08.02 ஆந் திகதியிடப்பட்ட 7101 ஆம் இலக்கம் கொண்ட பிரசித்த நொத்தாரிசு லக்ஷ்மன் சிறிவர்தன கீகியனகே அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதோடு, இந்த அற்றோணித் தத்துவம் இதன் பின்னர் வலுவற்றதாக்கப்படும் எனவும் இத்தால் அறிவித்தல் செய்கிறேன்.

முனிதாச பத்திரனகே சுரேந்திர ஆரியதாச.

8-363

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 31, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலியைச் சேர்ந்தவரும் 600991094V எனும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவருமான சந்தன ஜகத்ப்ரிய நாணாயக்காரவுக்கு காலி பிரசித்த நொத்தாரிசு தயாபால வரகாகொட விதாரண அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 50/2, ஹீன்பெந்தல வீதி, காலியைச் சேர்ந்த 625811104V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்ட சாந்தி விக்ரமதுங்க செனவிரத்ன எனும் என்னால் 2008.08.11 ஆந் திகதி வழங்கப்பட்ட 4185 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவம் 2015.07.28 ஆந் திகதியிலிருந்து இத்தால் கைமீட்டப்பட்டு வலுவொழிக் கப்பட்டு இரத்துச் செய்யப்படுகிறது என்றும், இனிமேல் குறிப்பிடப்பட்ட அற்றோணித் தத்துவம் மூலம் செய்யப்படும் எந்த கொடுக்கல் வாங்கல் களுக்கும் நான் என்னைப் பொறுப்பாகக் கொள்ளமாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

சாந்தி விக்ரமதுங்க செனவிரத்ன.

8-433

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 18, விதுலிபுர, நோட்டன் பிரிட்ஜ் இல் வதியும் யத்தல கமராலலாகே சொமிபால (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 380851245V) ஆகிய நான் எனக்குரிய அபடீன் இரண்டு இலக்கம் 112 கொண்ட வரைபடத்தில் 217 கொண்ட காணி, நாவலப்பிட்டிய சட்டத்தரணி (திருமதி) மனோரி ஜயலத் 2015.11.22 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய 5496 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணித் தத்துவம் அபடீன் இரண்டில் வதியும் வெதகெதர கமனி விஜேநாயக்க அதிகாரம் பெற்றவராக நியமிக்கப்பட்டதென்பதுடன் கூறப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச்செய்து வலுவற்றதாக்கப் பட்டுள்ளது என்பதுடன் இதன் பின்னர் கூறப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் செய்யப்படும் ஏதேனும் செயற்பாட்டுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பொது மக்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

யத்தல கமராலலாகே சொமிபால.

8-336

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 11, செட்டியார் தெரு, இல. 304 இல் வசிக்கும் பாத்திமா சாகிர் ஹுசைன் கம்ருடீன் திருமணத்திற்கு முன் வெரோணிக்கா மிகோன்னே டி சில்வா ஆகிய நான், கொழும்பு 11, செட்டியார் தெரு, இல. 304 ஐச் சேர்ந்த சாகிர் ஹுசைன் கம்ருடீன், இம்ரான் அலி கம்ருடீன் என்பவர்களுக்கு கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீ ராகவன் நாராயணசாமி என்பவரினால் 2022 ஆம் இலக்க, 1986.10.10 ஆந் திகதியிடப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் கொழும்பு பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 1986.10.16 ஆந் திகதிய தொகுதி 61, பக்கம் 173, இல. 8461 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரர்களினால் எனது சார்பில் செய்யப்படும் எந்தச் செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்கள் எதனையும் நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேன் என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

பாத்திமா சாகிர் ஹுசைன் கம்ருடீன்
திருமணத்திற்கு முன்
வெரோணிக்கா மிகோன்னே டி சில்வா.

8-338

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, கிருலப்பனை, புகையிரத வீதி, 29 ஆம் இலக்க விலாசத்தில் வசிக்கும் சிறிசேன கன்னங்கர விஜயதுங்க (அடையாள அட்டை இல. 323111596V) எனும் நான், கோட்டே, கோட்டைப் பாதை, 653/4ஏ எனும் விலாசத்தில் வசிக்கும் பெந்தரகே சாந்தனி மல்காந்தி அல்விஸ் (ஆள் அடையாள அட்டை இல. 697311564V) என்பவர் 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி சட்டத்தரணி அனுசா ரணசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 434 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை

2015, யூலை மாதம் 5 ஆந் திகதியிலிருந்து வலுவிழக்கச் செய்துள்ளேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பொது மக்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

சிறிசேன கன்னங்கர விஜயதுங்க.

8-295

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கப்பெட்டிவலான, போயவலான என்ற இடத்தைச் சேர்ந்த சந்தலங்காவலகே சாலிய சம்பத் சந்தலங்கா (தே. அ. அ. 832160172V) அற்றோணி உரிமையாளராகிய என்னால் கப்பெட்டிவலான, போயவலானவைச் சேர்ந்த ஹிட்டிஹாமிலாகே குமாரசிங்க (தே. அ. அ. 653411766V) என்பவர் பேரில் வழங்கப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு அனுர ரீ. பி. ஹேரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2011.01.03 ஆந் திகதிய 1432 ஆம் இலக்கமுடையதும் குருநாகல் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 2011.02.07 ஆந் திகதிய 2477 எனும் தொகுதியில் 329 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக் கப்பட்டுள்ளது என்பதுடன் இந்த அற்றோணித் தத்துவத்தினால் இதனகத்துப் பின்னர் எவ்வித பொறுப்பும் ஏற்கப்படாதென்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சந்தலங்காவலகே சாலிய சம்பத் சந்தலங்கா.

8-339

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகைக்கு விற்றல்- 2016

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும், ஏற்புடையதான பிற நாட்டு நடைமுறைக்கு வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2016 ஆம் ஆண்டில் பிறநாட்டுக் குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2015.08.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திரங்களையும் மற்றும் சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு கோரப்பட்டுள்ள தேவைகளுக்கு உட்படாத கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் -**

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டுடனும் ;

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும் இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு இடப்பட வேண்டும் அல்லது உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வாங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டுக் குடிவகை தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப்பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகைகள் 2015.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

யூ. பீ. இந்திக்க அநுருத்த பியதாச,
உடபலாத்த பிரதேச செயலாளர்.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2015, யூன் 17.

**அட்டவணை**

***கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளின் பட்டியல் - 2016***

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸல்லாவ | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2015.08.26- மு. ப. 10.30 மணிக்கு | 3,000 |

8-284/2

---

## அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்பனை - 2016

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான தவறணைகள் (தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) குத்தகைக்கு கொடுத்தல், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் குத்தகைக்கு கொடுத்தல் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு மதுபான தவறணைகள் (தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) தனிநபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகைக் கொடுப்பனவுக்கான உத்தரவுபத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) அனைத்து கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்ப படிவமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிரந்தர வைப்பு பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிராந்திய மேலதிக அரசாங்க அதிபரால்/பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்வி தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும்போது வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும் :-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் ;

(3) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்;

(4) சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்விகள் செய்யப்படவேண்டிய கால எல்லைக்குள் இடப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விதாரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்கு குறையாத பிணைப்பணமாக அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணமானது பணம், காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகளை செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

9. மேற்படி திகதியில் குத்தகை தவறணைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் 2015.11.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

எச். எம். சீ. கே. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2015, யூலை 17.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபானத் தவறணைகள்**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லை | பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|
| 1. நோர்வுட் | நோர்வுட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட் பட்ட பிரதேசம் | 2015.09.14– மு. ப. 10.30 | 5,000 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2015.09.14– மு. ப. 10.30 | 5,000 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2015.09.14– மு. ப. 10.30 | 5,000 |

8-282

---

**மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2016**

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2016, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்களுக்கு செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகை காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்ரேப்பிலர் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரி சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

"மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் - 2016"

2015.09.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளில் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கம் | பிரிவு | பிரதேச மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் திகதியும் நேரமும் | விற்கப்படும் திகதி |
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகரசபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலி பாதை யின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு. ப.11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2015.09.15 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **முக்கியம்**.- 2015.09.15 ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2015.11.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.

கே. சீ. நிரோசன்,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2015, யுலை 6.

8-429

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

பீ. டீ. ஜயமான்ன/யூ. ஜீ. சீ. டீ. கருணாரத்ன - கணக்கு இல. 0054 5000 0185

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2010.08.04 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.09.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2010.09.03 ஆந் திகதிய "திவயின", "ஐலன்ட்", "தினக்குரல்" தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, பதினேழு இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்றெண்பத்திரண்டு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 17,04,782.19) 2010, மே 14 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தேழு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 13,57,547.41) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் 12.5% மேலும் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா (ரூ. 2,30,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2015.09.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிரவட்களுக்குள் வட்டரக்க கிராமத்தில் அமைந்த "வட்டரக்க எஸ்ட்டேட்" எனவழைக்கப் படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. சிரிவர்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 3 ஆந் திகதியிடப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 109 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : அயலவர்கள் உரிமம் கோரும் காணி ; கிழக்கு : லொட் 2ஏ இன் லொட் 2டி ; தெற்கு : லொட் 56 (பிரவேச வழி) மற்றும் அதே காணியின் லொட் 108 ; மற்றும் மேற்கு : லொட் 56 (பிரவேச வழி) மற்றும் அதே காணியின் லொட் 110. இவ்வெல்லை களுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்மூன்று தசம் மூன்று சைபர் பேர்ச். (0ஏ. 0றூ. 13.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவே சங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன். கூறப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப்பதிகவத்தில் பரிமாணம்/பக்கம் ஏ 593/213 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வட்டரக்க கிராமத்தில் அமைந்த "வட்டரக்க எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு இல. 46/1999 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 110 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : அயலவர்கள் உரிமம் கோரும் காணி மற்றும் லொட் 111 ; கிழக்கு : அயலவர்கள் உரிமம் கோரும் காணி மற்றும் அதே காணியின் லொட் 109 ; தெற்கு : அதே காணியின் லொட்கள் 109 மற்றும் 56 ; மற்றும் மேற்கு : அதே காணியின் லொட் 111. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் சைபர் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 10.04பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்திற்கு அமைவாக காலி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஏ 593/214 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இல. 46/1999 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 13 மற்றும் 56 இன் ஊடாகவும் அதன் மீது பிரவேசிப்ப தற்கான மற்றும் மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-415

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — நீர்கொழும்பு கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

**தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், திக்வெல்ல பிரதேச சபை எல்லையில் தொடம்பஹல மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வெல்லபடபத்து தொடம்பஹல கிராமத்தில் அமைந்துள்ள பட்டபெந்திகேவத்த என்றழைக்கப்படும் காணிக்கு நிலஅளவை யாளர் பி. ஜீ. கருணதாச 2009.11.08 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2752 இல் காட்டப்பட்ட லொட் 1, அங்குள்ள கட்டிடம், பயிர்ச்செய்கை அதனகத்தேயுள்ள அனைத்தும்**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 0பே.)**

(கடன் எடுத்த தரிந்து ஜனக பிரதாபசிங்க மற்றும் திப்பல கமகே சுவர்ணலதா குணவர்தன மற்றும் காணியை ஈடுவைத்த தரிந்து ஜனக பிரதாபசிங்க மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.)

மேற்படி காணி, என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2015, செத்தெம்பர் மாதம் 4 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.02.13 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.08.14 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2015.08.17 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.**- திக்வெல்ல நகரத்திலிருந்து தங்கல்ல வீதியில் (மஹவெல ஊடாக) 182 ஆம் கிலோ மீற்றர் கல் வரை

(விஜித சென்ரல் கல்லூரியைத் தாண்டி) சென்று மேலும் 2 கி. மீ. சென்று மேலும் 100 மீற்றர் சென்றால் குறித்த காணியை அடைய முடியும். இக்காணி வீதிக்கு வலது பக்கம் உள்ளது. (சயலின சேர்விஸ் சென்ரர்).

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- வெற்றி பெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது அம்பலங்கொட கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 157, திஸ்ஸ வீதி, அம்பலங்கொட. தொலைபேசி இல. : 047-2223819 ; தொலைநகல் இல. : 047-2223817.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்-அஞ்சல் : senaservice@sltnet.lk

8-421

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ – கலஹா கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்கும் வியாபாரத்திற்கும் பொருத்தமான சகல வசதிகளையும் கொண்ட சொத்து ஏல விற்பனை

**கேகாலை நகர சபை எல்லைக்குட்பட்ட ரன்வல கிராமத்தில் கொழும்பு-கண்டி பிரதான பாதையின் எல்லையில் அமைந்துள்ள மொரகஹமுல ஹேன மற்றும் பனாவத்தேஹேன எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. குருகுலசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.04.18 ஆந் திகதிய பீ2635 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தொதுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள் அடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.**

**(காணியின் விஸ்தீரணம்: 46 பேர்ச்சு)**

**(மேற்கூறிய வரைபட இல. பீ2635 இல் குறிக்கப்பட்ட லொட் 5 எனும் பாதையை உபயோகிக்கும் உரிமையுடன்)**

*(இவ்வாதனத்தை வேவிட விதானலாகே மாதவ கீர்த்தி சுரன்ஜித் வேவிட எனும் மாதவ கீர்த்தி வேவிட என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ இற்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்திற்கு வந்தடைதல்**.- கேகாலை நகர மத்தியிலிருந்து கொழும்புப் பாதையில் சுமார் 3 கி. மீ. தூரம் 75/8 ஆம் மதகு வரை வந்தால் இவ்வாதனம் இப்பாதையின் இடது பக்கத்தில் பாதைக்கு எதிர்த்ததாக அமைந்துள்ளது. (வரிப்பண இல. 617 கொழும்புப் பாதை).

இவ்வாதனம் 2015.09.07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2014.11.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.12.02 ஆந் திகதிய ''லக்பிம'', ''டெய்லி மிரர்'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகளை ஏலவிற்பனையாளாரிடம் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து வீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை வீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்க வேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல.479, டீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 011-2661833, 011-2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

8-294

**செலான் வங்கி பீஎல்சீ - நீர்கொழும்பு கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**ஏல விற்பனை**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டு தனது பதிவிலக்கம் பீவீ 9624 ஐக் கொண்ட நீர்கொழும்பில் அமைந்த கம்பனியான வெஹிகல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் நீர்கொழும்பில் வதியும் ஹந்துன் ஹர்ஷா பிரபாத் சில்வா (பிணைப் பொறுப்பாளர்) ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். எம். குணசிங்க அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, நவெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்டு 2740 மற்றும் 2741 என இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறி மூலமாக எடுத்த கடனைச் செலுத்தத் தவறியதால் 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி முறையே மு. ப. 10.30 மணிக்கும் மற்றும் மு. ப. 10.45 மணிக்கும் காணிகள் அமைந்துள்ள இடத்தில் செலான் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2015.07.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2015.06.22 ஆந் திகதிய ''லங்காதீப'', ''டெயிலி மிரர்'' மற்றும் 2015.07.06 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவு அலுவலகப் பிரிவுக்குள் அலுத்குரு கோரளை துனுகஹபற்று கட்டான பிரதேச சபை எல்லைக்குள் திம்பிரிகஸ்கட்டுவையில் அமைந்துள்ள தெவட்டகஹவத்தை மற்றும் மாவத்தகஹவத்த அல்லது தெவட்டகஹ வத்தை என்றழைக்கப்படும் காணி வரிப்பண இல. 363 மற்றும் 367/1, கிரியுல்ல வீதி எனவும் அடையாளப்படுத்தப்படும் இக்காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் அளந்து 2009.09.14 ஆந் திகதியிடப்பட்ட 6393 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விஸ்தீரணம் : ஒரு றூட் முப்பத்தெட்டு தசம் ஒன்று ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 38.15பே.) இதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரம், செடி, பயிர்செய்கை மற்றும் அதனகத்தேயுள்ள சகலதும்.

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவு அலுவலகப் பிரிவுக்குள் அலுத்குரு கோரளை துனுகஹபற்று கட்டான பிரதேச சபை எல்லைக்குள் திம்பிரிகஸ்கட்டுவையில் அமைந்துள்ள தெவட்டகஹவத்தை என்றழைக்கப்படும் காணி வரிப்பண இல. 365, கிரியுல்ல வீதி எனவும் அடையாளப்படுத்தப்படும் இக்காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் அளந்து 2011.12.27 ஆந் திகதியிடப்பட்ட 6962/1 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் விஸ்தீரணம் : இருபது தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 20.65பே.)இதனுள் அடங்கும் கட்டிடங்கள், மரம், செடி, பயிர்ச்செய்கை மற்றும் அதனகத்தேயுள்ள சகலதும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- நீர்கொழும்பு நகர மத்தியிலிருந்து பிரதான வீதி வழியாக கொப்பரா சந்தியின் நீர்கொழும்பு வீதி Y சந்தியில் கிரியுல்ல வீதியிலிருந்து 1 கிலோ மீற்றர் வரை செல்லும்போது இடப்பக்கத்தில் இக்காணி அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சிக் கட்டணம் 1% ;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் 2.5% ;
(4) நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவு.

மிகுதி 90% மும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசால் அல்லது வேறு அதிகார சபை மற்றும் வேறு நியதிச்சட்ட வரி அல்லது கட்டணம் இருப்பின் அவைகளும் சேர்த்து ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் செலுத்தப்படாவிட்டால் தற்போது செலுத்தப்பட்ட பணம் திருப்பி வழங்கப்படாமல் புதிய ஏல விற்பனை நடத்தப்படும்.

உறுதி பற்றிய விபரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பார்வையிட கீழே உள்ளவரிடம் அணுகவும் :-

''உதவி பொது முகாமையாளர்-சட்டம், செலான் வங்கி பீஎல்சீ, செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2456485, 011-2456479.

சந்திம பிரியதர்சனி கமகே,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

இல. 9-1, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம,
தொலைபேசி இல. : 071-4318252, 011-2173282.

8-348

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.